**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**
**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக** **(15x1=15)**

1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?
2. முதற்பொருள் என்றால் என்ன?
3. சுட்டெழுத்துகள் யாவை?
4. மெய்ம்மயக்கம் என்றால் என்ன?
5. உயிர் எழுத்துகளின் பிறப்பிடம் குறித்துத் தொல்காப்பியம் கூறுவது யாது?
6. பதத்தின் வகைகளைக் கூறுக?
7. நன்னூலார் கூறும் விகுதிகள் எத்தனை?
8. நன்னூலார் எழுத்து இலக்கணத்தை எத்தனை வகையாகப் பிரிக்கிறார்?
9. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் மொத்தம் எத்தனை?
10. தமிழ் இலக்கண நூலார் குறிப்பிடும் உடம்படுமெய் யாது?
11. எண்ணுப்பெயர்களில் முற்றியலுகர ஈற்றில் அமைந்தது எது?
12. தனிக்குறில் முன் வரும் மெய் உயிர்வரின் எவ்வாறு ஆகும்?
13. நிலைமொழியின் இறுதியில் உள்ள ணகர, ளகர மெய்களுக்கு முன் வரும் நகர மெய் எவ்வாறு திரியும்?
14. எல்லா நம்மையும் என்ற சொல் இக்காலத் தமிழில் எவ்வாறு வழங்குகிறது?
15. குறிப்பு வினையெச்சத்தை மொழியியலார் எவ்வாறு குறிப்பிடுவர்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. செய்யுளில் வரும் சொற்கள் எத்தனை வகைப்படும்?
2. சார்பு எழுத்துகள் எனப்படுபவை யாவை?
3. தொல்காப்பியர் எழுத்தொலிகள் தோன்றத் தேவைப்படும் உறுப்புகளாக உரைப்பவை எத்தனை? அவை யாவை?
4. தமிழ் எழுத்துகள் சொல்லாவதற்குக் கூறப்படும் உவமையை விளக்குக.
5. பொதுப்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
6. வினாப்பெயர், விளிப்பெயர் முன் வல்லினம் எவ்வாறு புணரும்?
7. வேற்றுமையில் ய, ர, ழ ஈறுகளின் முன் வரும் வல்லினம் மிகுதலுக்குச் சான்று தருக.
8. கீழ் என்னும் சொல்லுக்குரிய சிறப்பு விதி யாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில்விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ் இலக்கண நூல்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழியின் முதல் எழுத்துகள் குறித்து எழுதுக.

2. (அ) ஓரெழுத்து ஒரு மொழி குறித்துத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பொருளின் அடிப்படையில் புணர்ச்சிப் பாகுபாடு குறித்து விளக்குக.

3. (அ) எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, எட்டு, ஆகியவற்றிற்கான சிறப்பு விதியை எழுதுக.

(அல்லது)

(ஆ) வேற்றுமை உருபுகள் நிலைமொழி மற்றும் வருமொழிகளோடு புணரும் முறை குறித்து எழுது.

•••••••